Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Vol. 69 அப்பொழுது கர்த்தாவே, உம்முடைய கண்டிதத்தினாலும்.... தண்ணீர்களின் மதகுகள் திறவுண்டு,.....காணப்பட்டன சங். 18: 5 ஜனவரி 2023 No.1

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார்

The Holy Spirit guides us into all Truth.

R.A. Torrey

"இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்கு சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப் போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்". யோவா. 16: 12-14. நாம் மனிதரிடமிருந்து பல காரியங்களைக் கற்றுக் கொண்டாலும் அவைகளையோ, அவர்களையோ நாம் சார்ந்திருப்பதில்லை. ஏனெனில் பரிசுத்த ஆவியாகிய தெய்வீக போதகர் நமக்கு இருக்கிறார்.

தூய ஆவியானவரால் நாம் நேரடியாகப் போதிக்கப்படும் வரைக்கும் நாம் சத்தியத்தை அறியவே முடியாது. எந்த அளவிலான மானிட போதனையும், எப்படிப்பட்ட போதகராயிருந்தாலும் சரியானதும், சிறிதும் பிழையில்லாததுமான சத்தியத்தைக் குறித்த முழுமையான புரிந்து கொள்ளுதலைத் தர முடியாது. வேதவசனத்தின் கருத்தான ஆராய்ச்சியும் உண்மையான புரிந்து கொள்ளுதலைத் தரமுடிவது இல்லை. எந்த பாஷையில் படித்தாலும் நம்மால் புரிந்து கொள்ள முடியாது. எனவே தூய ஆவியானவர்தான் நேரடியாக நம் ஒவ்வொருவரையும் போதிக்க வேண்டும். இவ்வாறு போதிக்கப்படுகிறவர்கள் கிரேக்கு, எபிரேய பாஷைகளில் பாண்டித்தியம் பெற்றவர்களை விடவும் எந்த மூலபாஷைகளில் தேர்ச்சியடைந்தவர்களைவிடவும் வேத வசனங்களை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

தேவனுடைய சத்தியத்தின் முழுவட்டமும் நம் எல்லாவருக்கும் உரியது. ஆனால் ஒரே நாளில் தூய ஆவியானவர் ககல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழி நடத்த முடியாது. ஒரே வாரத்திலும், ஒரே மாதத்திலும், ஒரே வருடத்திலும் அது கூடாதது. ஆனால் படிப்படியாக அவர் நம்மைப் போதிப்பார்.

தூய ஆவியானவர் கிறிஸ்துவை வெளிப்படுத்துவார்

"அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை (கிறிஸ்துவை) மகிமைப்படுத்துவார்". அவரது எல்லாவற்றிற்கும் மேலான பணி இயேசுக் கிறிஸ்துவை வெளிப்படுத்துவதும் அவரை மகிமைப்படுத்துவதுமாகும். அவரது முழுமையான போதனையும் கிறிஸ்துவை மையமாகக் கொண்டதாகும். ஒரு விதத்தில் அல்லது இன்னொரு விதத்தில் அவர் நம்மை இயேசுக் கிறிஸ்துவினண்டை கொண்டு வந்து விடுகிறார்.

தூய ஆவியானவர் குறித்த சத்தியத்தினை அழுத்திக்கூற சிலர் பயப்படுகிறார்கள். அவர்களை கிறிஸ்துவே சந்திக்க வேண்டும். ஏனெனில் தூய ஆவியானவர் மகிமைப்படுத்துவது போல கிறிஸ்துவை எவரும் மகிமைப்படுத்துவதில்லை. எந்த அளவில் பிரசங்கங்களைக் கேட்டாலும் விரிவுரைகளைக் கேட்டாலும், எவ்வளவு ஆழமாக வசனத்தைப் படித்தாலும் கிறிஸ்துவின் விஷயங்களைப் புரிந்து கொள்ள தூய ஆவியானவர்தான் வழிகாட்டவும், சித்தமுள்ளவராகவும் கூடியவராகவும் இருக்கிறார். தூய ஆவியானவரின் மிகப் பெரிய ஆவல் இயேசுக் கிறிஸ்துவை மனிதருக்கு வெளிப்படுத்துவதாகும்.

பெந்தெகொஸ்தே நாளிலே பேதுருவும் அவனோடிருந்தவர்களும் தூய ஆவியால் நிரப்பப்பட்ட போது அவர்கள் தூய ஆவியானவரைப்பற்றி அதிகமாகப் பேசாமல் கிறிஸ்துவைப் பற்றியே பேசினார்கள். அன்று பேசின பேதுருவின் பிரசங்கத்தைக் கவனித்தால் இயேசுக் கிறிஸ்து ஒருவரே அவனுடைய தலையங்கமாயிருந்தார். நாமும் தூய ஆவியைக் குறித்துப் போதிக்கப்பட்டால் நமக்கும் இயேசுக் கிறிஸ்துவே கருப்பொருளாயிருப்பார். நமது முழுப் பார்வை வட்டத்தையும் அவர் நிரப்பி விடுவார். அப்போது நாம் ஒரு புதிய மகிமையான கிறிஸ்துவைப் பெற்றுக் கொள்வோம். அதனால் எல்லாரிடமும் சென்று இந்த மகிமையான கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லுவோம்.

ஆவியானவர் ஆழமானவற்றை வெளிப்படுத்துவார்

(1 கொரி. 2: 9-13 படிக்க)

தேவனுடைய ஆழமான காரியங்களை தனி விசுவாசிக்கு ஆவியானவர் வெளிப்படுத்துவதை மனித கண்கள் கண்டதுமில்லை, காதுகள் கேட்டதுமில்லை. தேவன் தம்மை விசுவாசிக்கிற வர்களுக்கு ஆயத்தம் பண்ணியவைகள் சிறப்பானவை. அது பரலோகத்தை மட்டுமோ இனி வரப்போகிறவைகளையோ மட்டும் குறிக்கவில்லை. இந்த வாழ்விலேயே அவை நமக்கு வெளிப் படுத்தப்படுகின்றன.

ஆவியானவர் வசனத்தை விளக்குகிறவராயிருக்கிறார்

1 கொரி. 2: 14ல் இப்படி வாசிக்கிறோம். "ஜென்ம சுபாவமுள்ள மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரிய வைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாய் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால் அவைகளை அறியவும் மாட்டான்".

தூய ஆவியானவர் தேவ வசனத்தை வெளிப்படுத்தும் காரண கர்த்தா மட்டுமல்ல, அவர் வெளிப் படுத்தியதை விளக்குகிறவருமாயிருக் கிறார். எந்த ஆழ்ந்த கருத்துக்கள் செறிந்த புத்தகமும் அதன் ஆக்கியோன் அதனை விளக்க நமக்கருகில் இருந்தால் அளவில்லாத உற்சாகத்தை நமக்கு அளிக்கும். எனவே வேத புத்தகத்தின் ஆக்கியோன் எப்போதும் நம் அருகிலிருப்பது நமக்கு ஒரு சிறந்த சிலாக்கியம். தூய ஆவியானவர்தான் வேத புத்தகத்தின் ஆக்கியோன். அவர் அதன் பொருளை திறந்து வாசிக்கும் ஒவ்வொரு வருக்கும் விளக்குகிறார்.

இந்தப் பரிசுத்த வேத புத்தகத்தைப் புரிந்து கொள்ள அவரையே நோக்கிப் பார்க்க வேண்டும். அப்போது அதன் இருண்ட பகுதிகள் தெளிவாகி விடும். சங். 119: 18ம் வசனத்தை சங்கீதக் காரனோடு சேர்ந்து ஜெபிப்போம். "உமது வேதத்திலுள்ள அதிசயங்களைப் பார்க்கும்படிக்கு என் கண்களைத் திறந்

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும் உங்கள் **பத்திரிகை பதிவு எண், தொலைபேசி எண்** இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

கடிதம், காணிக்கை, கொரியர்அனுப்ப வேண்டிய முகவரி :

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil - 629 001.
Mobile : 9543221008

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

M வருகையின் தூதன் ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.

Y மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் ரூபாய் **500** அனுப்புங்கள்.

S உங்கள் பிறந்த நாள், திருமண நாள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் பிறந்த நாள் போன்ற மகிழ்ச்சியான தினங்களில், ஆண்டவருடைய ஊழியத்திற்கு சிறப்பு காணிக்கை அனுப்பி ஆண்டவரின் ஆசீர்வாதத்தை பெறுங்கள்.

EL SHADDAI

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2023 ஜனவரி மாத பத்திரிகைக்காக என் தேவனை நன்றியோடும், வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும் துதிக்கிறேன். நவம்பர் மாதம் 20ம் தியதி இந்த ஆசிரியர் கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.

கர்த்தருடைய கிருபையினால் நவம்பர் மாதம் 11-ம் தியதி மாலை 6.10 மணிக்கு கன்னியாகுமரி அதிவிரைவு ரயில் வண்டியில் புறப்பட்டோம். இந்த விசை குடும்பமாக சென்றோம். 12-ம் தியதி சனிக்கிழமை உபவாச ஜெபத்தை நடத்த அன்பின் ஆண்டவர் இரக்கம் பாராட்டினார். **உபவாச ஜெபம் மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது** என்று சபை மக்கள் கூறினதாக உதவி போதகர் சொன்னார். ஆண்டவர் இரங்கி அன்று பகல் முழுவதும் மழை பெய்யாதபடி காத்தார்.

இரவு 7.00 மணிக்கு மழையில் நனைந்து கொண்டே ஆட்டோவில் சேப்பாக்கம் **அழைப்பின் எதிரொலி தேவ சபை** போய் சேர்ந்தேன். ஞாயிறு காலை 8.00 மணி, 10 மணி ஆகிய இரண்டு தமிழ் ஆராதனைகளிலும் ஆண்டவருடைய வசனத்தைப் பிரசங்கித்தேன். ஞாயிறு மாலை 6.10 மணிக்கு குடும்பமாக புறப்பட்டு, திங்கட் கிழமை காலை 5.00 மணிக்கு நாகர்கோவில் வந்து சேர்ந்தோம்.

சுமார் **28** ஆண்டுகள் கன்னியாகுமரியில் உபவாச ஜெபங்களை நடத்தின பின்பு, ஆண்டவர் கிருபையாய் என்னை வழி நடத்தினபடி, 2013-ம் ஆண்டு இயேசு நம்மோடு சபை, தூத்துக்குடி, 2014 காது கேளாதோர் பள்ளி, பாளயங்கோட்டை, 2015 ஷெக்கைனா A.G. சபை, சிவகாசி ஆகிய இடங்களில் உபவாச ஜெபங்களை ஆண்டுக்கு ஒரு முறை நடத்தினோம்.

மாதந்தோறும் உபவாச ஜெபத்தை நடத்துங்கள் என்று கர்த்தர் சொன்னதினால், 2016-ம் ஆண்டு முதல் மாதந்தோறும் உபவாச ஜெபங்களை பல்வேறு இடங்களிலுள்ள சபைகளில் மிகுந்த செலவு, பிரயாசம், அலைச்சல்கள் மத்தியில் நாம் நடத்தி வருகிறோம். **வாசகர்களாகிய நீங்கள் ஏன் ஒருவர் கூட இந்த உபவாச ஜெபங்களுக்கு வருவதில்லை?**

ஒரே ஒரு வசனத்தை மாத்திரம் எழுதி **உபவாசம்** என்கிற இந்த **அருமையான ஆயுதம்** பற்றி எழுதுவதை நிறுத்துகிறேன். மத்தேயு 4: 2:

இயேசு இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமாயிருந்த பின்பு, அவருக்கு பசியுண்டாயிற்று.

எழுப்புதலுக்காக இதய கதறல் 2023
Heart cry for Revival 2023

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	21.01.2023 3rd Saturday	Calvary A.G. Church, Surandai, Nellai
பெப்ரவரி		
மார்ச்	11.03.2023 2nd Saturday	St. Johns C.S.I மலைக்கோடி, வேலூர்
ஏப்ரல்		
மே		
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்		
செப்டம்பர்		
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

வாசகர் கடிதம்

SA 01567

அன்புள்ள ஐயா,

01-10-2022 அன்று கடவுள் கிருபையால் எனக்கு 86 வயது முடிவடைகிறது. கர்த்தருக்கு கோடி ஸ்தோத்திரங்கள். என் வாலிப வயதில் நான் இரட்சிக்கப்பட்டு, நெய்வேலியில் ஆசிரியப்பணி புரிந்துக் கொண்டிருக்கையில் வருகையின் தூதன் ஆசிரியர், கனம் **தேவதாசன்** ஐயாவிடம் ஞானஸ்நானம் பெற்றேன். கடவுள் அருளால் பலப்பட்டு, 36 வருடங்கள் ஆசிரியராகப் பணிபுரியும் ஆசீர்வாதமும் பெற்றேன். என் கணவரும் இங்கு ஆசிரியராகப் பணிபுரிந்தார்கள். அவர்கள் கர்த்தருக்குள் நித்திரை அடைந்து 9 ஆண்டுகள் ஆகிவிட்டன. என் இரு மகன்களும் நெய்வேலியிலேயே குடும்பமாய் பணி புரிகின்றனர், கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நான் என் பிள்ளைகளின் வீடுகளில் தங்கி வருகிறேன். இம்மட்டுமாக கிருபையாக வழி நடத்தி வருகிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

50 ஆண்டுகளுக்கு மேலாக நெய்வேலி ALC திருச்சபையோடு இணைந்து, ஆவிக்குள்ளான தேவனுடைய பிள்ளையாக வாழும் பாக்கியம் தந்தார். கண்களில் நல்ல பார்வை பெற, கால்களால் நடந்து ஆலயம் செல்ல, முடிவில் நித்திய இராஜ்யத்தில் சேர, எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்களுக்கும் நல்ல சுகம், பெலன், நீண்ட ஆயுள் அருளி 'வருகையின் தூதன்' ஆசீர்வாதமாய் நடைபெற ஆசி, வாழ்த்து கூறுகிறேன்.

(8-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

காசோலை *(Cheque & Draft)*

வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்

உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்

Mobile : **95432 21008** Whatsapp :**9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

பத்திரிகை பணி

A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab **N**ational **B**ank, Nagercoil -1. IFSC Code : **PUNB**0213120

வருகையின் தூதன் உபவாச ஊழியம்

A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA**0000063

முன்னேற்றப்பணி

A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara **B**ank, Ngl-1 IFSC Code : **CNRB**0001110

(1-ம் பக்க தொடர்ச்சி)

தருளும்". தேவனுடைய வெளிப்பாடு மட்டுமல்ல, தேவ வசனத்தைப் புரிந்து கொள்ள தூய ஆவியானவரின் உள்ளான வெளிச்சம் தேவை. இயற்கையான புரிந்து கொள்ளுதலை பயன்படுத்தி ஆவிக்குரிய வெளிப்பாட்டினைப் பெற முயற்சிப்பது சாதாரணமான ஒரு தவறாகும்.

பூர்வ கால யூதர்களுக்கு ஆவியானவரால் வெளிப்பாடு இருந்தது. ஆனால் அவர்கள் அந்த வெளிப்பாட்டினை சார்ந்திராதபடியால் வழி தப்பிப் போனார்கள். அது போல இன்றைய கிறிஸ்தவர்களுக்கு தூய ஆவியானவரின் வெளிப்பாடு இருந்த போதும் அவர்கள் அவரைச் சார்ந்து கொள்ளாததால் வழி தவறிப் போகிறார்கள். முழுமையான சுவிசேஷம் அறிவிக்கும் சபையும் மனிதனுடைய சொந்த நீதி போதாதென்பதை அனுபவரீதியல்லாத முறையில் உணர்ந்து கொண்டுள்ளனர். இந் நேரத்தின் தேவை மனித ஞானத்தின் போதாக் குறையை உணருவதாகும். தேவ வசனத்தைப் புரிந்து கொள்ள நமது சொந்த ஞானத்தை வெறுமையாக்கி, தேவ ஆவியைச் சார்ந்து கொள்ள வேண்டும். இயேசு சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள். "அந்த சமயத்தில் இயேசு சொன்னது: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தின படியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்" மத். 11: 25.

வேத வசனத்தைப் புரிந்து கொள்ள நாம் அனுதினமும் ஆவியானவரால் போதிக்கப்பட வேண்டும். ஆவியானவர் நேற்று நமக்குப் போதித்த வைகளால் நாம் இன்று திருப்தியடையக் கூடாது. ஒவ்வொரு குறிப்பிட்ட தருணத்தில் நாம் வேதவசனத்தை வாசிக்கும் போதும், அதற்கு ஏற்றபடி அவரது வல்லமையோடு படிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட சத்தியத்தை அறிந்து கொள்ள தூய ஆவியானவர் ஒருமுறை நமது மனதை பிரகாசிக்கச் செய்தால் மட்டும் போதாது. அந்தப் பகுதியை நாம் சந்திக்கும் போதெல்லாம் தேவ ஆவியானவர் நமது மனதைப் பிரகாசிப்பிக்க வேண்டும்.

ஆவியானவர் வல்லமைப்படுத்துகிறார்

(1 கொரி. 2: 1-5 படிக்க)

தெசலோனிக்கே சபை விசுவாசிகளுக்கு, பவுல் எழுதும் போது, "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும் முழு நிச்சயத்தோடும் வந்தது; நாங்களும் உங்களுக்குள்ளே இருந்த போது, உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே" 1 தெச. 1: 5.

முதலாவது தூய ஆவியானவர் சத்தியத்தை தமது தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலருக்கும் தீர்க்கர்களுக்கும் வெளிப்படுத்துகிறார். இரண்டாவதாக அவர் அந்த சத்தியத்தை நமக்குத் தெளிவு படுத்துகிறார், மூன்றாவதாக திறமையோடு பயன்படும் விதத்தில் அந்த சத்தியத்தைப் பிறருக்கு அறிவிக்க உதவி செய்கிறார்.

ஊழியத்தில் உண்மையான தோல்விக்கு, அல்லது அனைத்து விதமான சேவையிலும் தோல்வி ஏற்படக் காரணமாயிருப்பது மனித ஞானத்தைக் கொண்டு தேவ வசனத்தை போதிப்பதாகும். அதற்காக நமது திறமைகளை நாம் பயன்படுத்துகிறோம். நமக்கும் தேவை தூய ஆவியானவரின் வல்லமை ஒன்றே.

இன்றைய பிரசங்கங்களின் தோல்விக்கு மூன்று காரணங்களைக் கூறலாம். முதலாவது தூய ஆவியானவர் வெளிப்படுத்தாத வேறு செய்திகள் சொல்லப்படுவதாகும். எடுத்துக்காட்டாக அறிவியல், கலை, இலக்கியம், தத்துவ ஞானம், சமூகவியல், வரலாறு, பொருளாதாரம் போன்றவையாகும். இவற்றில் வேத வசனத்தின் ஒரு பகுதி கூட இருப்பதில்லை. இரண்டாவதாக ஆவியானவரால் போதிக்கப்பட்ட வேத வசனங்கள் இயற்கையான புரிந்து கொள்ளுதலால் ஆவியானவரின் ஒளியின்றி செய்யும் முயற்சி. மூன்றாவதாக தேவ ஆவியானவரின் வெளிச்சத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட தேவ வசனம் மற்றவர்களுக்கு மனித ஞானத்தால் ஆவியானவரின் வல்லமையின்றி சொல்லப்படுவதாகும். நமக்கு ஆவியானவர் எப்போதும் வேண்டும். நாம் எப்படிப் பேச வேண்டும் எதைப் பேச வேண்டுமென்று அவர்தான் நமக்குப் போதிக்க வேண்டும். அவர்தான் நமக்கு வல்லமையும் நாம் அளிக்கும் செய்தியுமாயிருக்க வேண்டும்.

கிறிஸ்துவே எல்லாவற்றிற்கும் எல்லாமானவர்

Christ is all

Rich Carmicheal

இந்தக் கடைசி நாட்களில் பொய் உபதேசங்களுக்கு எச்சரிக்கையாயிருக்கும்படி தேவனுடைய வசனம் தெளிவாக நம்மை எச்சரிக்கிறது. "ஆகிலும் ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே, சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்". 1 தீமோ. 4:1, மேலும் 2 தீமோ. 3:13; 1 யோவா. 4:1; 2 பேது. 3:17 ஆகிய வசனங்களைப் படிக்க.

சத்தியத்தைப் புரட்டுவதில் நாம் ஜாக்கிரதையாயிருப்பது போல கிறிஸ்துவின் நபரத்துவம், பணி ஆகிய வற்றை குறித்த தவறான உபதேசங்களுக்கும் நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். எபேசி 3: 11ல் கூறப்படுவது போல அவர் தேவனுடைய நித்தியமான திட்டத்தின் மற்றும் நோக்கத்தின் மையப் பொருளாயிருக்கிறார். அவரே அனைத்து புரட்டு உபதேசங்களுக்கும் வஞ்சகங்களுக்கும் இலக்காக்கப்படுகிறார். அவரது கன்னிகையில் பிறப்பு, தெய்வத்துவம், தேவ குமாரனென்ற ஒப்பற்ற நிலை ஆகிய சத்தியங்கள் தாக்கப்படுகின்றன. மேலும் அவர் ஒருவரே மீட்பின் காரணர் என்பதும் அவர் திரும்ப வருவேன் என்று சொல்லியிருக்கும் வாக்கும் கூட ஒத்துக் கொள்ளப் படாமலிருக்கின்றன.

இந்தத் தாக்குதல்கள் நீண்ட காலமாகவே இருக்கின்றன. கிறிஸ்துவின் நபரத்துவம் அவரது பணி இவற்றைக் குறித்த பொய் உபதேசங்கள் தொடரவும் வரும் நாட்களில் அதிகரிக்கவும் சாத்தியமுண்டு. 2 கொரி 11: 3-4 வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் தமது கரிசனையை வேறொரு இயேசவைப் பிரசங்கிக்கிற பொய் போதகர்களைக் குறித்து வெளிப்படுத்துகிறார். அப்போஸ்தலனாகிய பேதுரு தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்வார்கள் என 2 பேது. 2:1ல் எச்சரிக்கிறார். மேலும் கடைசி நாட்களில் பரியாசக்காரர் எழும்பி, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து கேள்வி எழுப்பு வார்கள் என்றும் 3:3-4 வசனங்களில் படிக்கிறோம். அப்போஸ்தலர் யோவான் அந்திக் கிறிஸ்துவின் ஆவியையும், இயேசுவின் மாம்ச அவதாரத்தையும் ஏற்றுக் கொள்ளாதவர்களைக் குறித்து 1 யோவா. 4:3; 2 யோவா. 1:7 ஆகிய வசனங்களில் எச்சரிக்கிறார். மேலும் அவர் இயேசுவே கிறிஸ்து என்பதை மறுதலிக்கிறவர்களைக் குறித்தும், (1 யோ. 2:22) அவரது உபதேசத்தில் நிலைத்திராதவர்களைக் குறித்தும் எச்சரிக்கிறார். (2 யோவா. 1:9)

இதே போல யூதாவும் கள்ளப் போதகர்கள் எவ்வாறு தந்திரமாய் நுழைந்து "ஒன்றான ஆண்டவராகிய தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவையும் மறுதலிக்கிறதைக்" குறித்து யூதா. 1:4ல் எச்சரிக்கிறார். அவர் 3ம் வசனத்தில் பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாகப் போராடவும் கூறுகிறார். இப்படிச் செய்வதால் சபைக்குள்ளிருந்து கிறிஸ்துவைக் குறித்த அடிப்படை சத்தியங்களைப் புரட்டுகிறவர்களுக்கு நாம் சவாலாயிருக்க முடியும். வேதவசனம் நமக்குப் போதிக்கிற சத்தியங்களை காலா காலங்களாக நமக்கு உத்தமமாக கொடுத்திருப்பதை நாம் காத்துக் கொள்வது அவசியம்.

கிறிஸ்துவே எல்லாம்

அனேக மார்க்கங்களும் தனி நபர்களும் இயேசுவை நல்ல போதகராகவும், நல்ல தீர்க்கராகவும் மற்றும் நல்ல தனி நபராகவும் வெளிச்சமிட்டுக் காட்டினாலும் அவர் மற்ற எல்லாரையும் விட மேலானவர். அவருடைய நாமம்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

எல்லா நாமத்திற்கும் மேலானது, எல்லா வகையிலும் அவரைப் பின்பற்றுவது சிறப்பானது என்பதை ஒத்துக் கொள்வ தில்லை. ஆனால் வேத புத்தகம் 'கிறிஸ்துவே எல்லாமானவர்' (கொலோ. 3:11) என போதிக் கிறது. வெளி. 22:13ல் 'நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தின வரும் பிந்தினவருமாயிருக்கிறேன்' என்று படிக்கிறோம். அவர் ஒருவரே மரித்தோரி லிருந்து எழுப்பப்பட்டு, "எல்லாத் துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கதக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்தார்" எபேசி. 1:20,21. பூமியிலும் வானத்திலுமுள்ள சகல அதிகாரங்களும் அவருடையது மத். 28:18. மேலும் எல்லாம் அவருக்கு கீழ்ப்படுத்தப் பட்டிருக்கின்றன. எபேசி. 1:22 அவர் ஒருவரே ஆண்டவர். அவர் மூலமாகவே 'எல்லாம் இருக்கின்றன அவராலே நாம் பிழைத்திருக்கிறோம்'. (1 கொரி 8:6) அவர் எல்லாவற்றிற்கும் சுதந்தரவாளி, தேவனுடைய மகிமையின் பிரகாசம், தேவனுடைய தன்மையின் சரியான பிரதிநிதித்துவம். அவர் 'தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே சர்வத்தையும் தாங்குகிறவர்'. (எபி. 1: 2-3) "ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்தி லுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவை களும் ..... சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கெனவும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர்; எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது". (கொலோ. 1: 16,17)

அவர் தேவனுடைய வார்த்தை. தேவனுடைய செய்தியாளரும் செய்தி யுமாய் உலகுக்கு வந்தார் (யோவா. 1: 1; எபி. 1: 2) இவற்றில் மிக முக்கியமானது: ".....கிறிஸ்துவானவர் வேத வாக்கியங் களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கி யங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த் தெழுந்தார்". 1 கொரி. 15:3,4. அவர் தேவனுடைய பரிசுத்தமானவர். அவரி டத்தில் நித்திய ஜீவ வசனங்கள் உண்டு (யோவா. 6:68-69) அவர் ஜீவ அப்பம். 6:35; ஜீவ தண்ணீர் ஊற்று. (4:14) அனைத்து ஆவிக்குரிய ஆசீர்வாதங் களுக்கும் ஆதாரம் (எபேசி.1:3) கொலோ. 2:3ன் படி அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்க ளெல்லாம் அடங்கியிருக்கிறது.

அவர் தேவ குமாரன்

இயேசு தேவனுடைய ஒப்பற்ற குமாரன் என்பதை அனேக சாட்சி களுடன் வேதத்தில் படிக்கிறோம். இயேசுவே தம்மைக் குறித்து சாட்சி யிடுவதை மாற். 14: 61-62 வசனங்களில் படிக்கிறோம். பிதாவானவர் இயேசுவின் ஞானஸ்நானத்தின் போதும், அவர் மறுரூபமானபோதும் 'இவர் என் நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்' (மத். 3:17; 17:5) என்று விளம்பியிருக் கிறார். ஆதியிலே இயேசு தேவனோ டிருந்தார். (யோவா. 1:1), பரத்திலிருந்து இறங்கி வந்தார் (6:38) மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார். (1: 14) அவரது அவதாரத்தைக் குறித்தும் அனேக போலிக் கிறிஸ்துவர்களும் தலைவர்களும் அவர் கன்னிகையிடம் பிறந்ததையும் மறுக்கிறார்கள். ஆனால் வேத புத்தகமோ மிகத் தெளிவாக அவர் பரிசுத்த ஆவியின் வல்லமையால் கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார் என்று அறிவிக் கிறது. (லூக். 1:35, மத். 1:23)

இயேசு தேவகுமாரன் என்ற சத்தியத்திற்கு ஏராளமான கருத்துக்கள் இருக்கின்றன. அவருடைய தெய்வத் துவத்தைக் குறித்தும் அவ்வாறு விவாதங் களுண்டு. யூத தலைவர்கள் அவர் தேவனைத் தமது சொந்த பிதா என்று அழைத்ததும் 'நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்' என்று (யோவா. 10:30) கூறியதும் "அவர் தம்மை தேவனுக்கு சமமாக்கினார்" (5: 18,10:33) என்று கூறுவதற்கு ஏதுவாயிற்று. ஆனால் வேதவசனங்கள் அவரது தெய்வத் துவத்தை உறுதிப்படுத்துகின்றன. கீழ்க்காணும் வசனங்களைப் படியுங்கள்: 'வார்த்தை தேவனாயிருந்தது' (1 யோவா. 1: 1) "அதற்கு இயேசு ஆபிரகாம் உண்டா கிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்". (யோவா. 8: 58) "..... அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்..... இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்". (மத். 1:23) "தோமா அவருக்குப் பிரதியுத் தரமாக, என் ஆண்டவரே, என் தேவனே! என்றான்". யோவா. 20:28 "ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரண மெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமா யிருக்கிறது". கொலோ.2:9. "குமாரனை நோக்கி தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது". (எபி. 1:8) பொய் உபதேசங்கள் கிறிஸ்துவின் தெய் வீகத்தை உதாசீனம் பண்ணுகின்றன.

அவரே இரட்சிப்புக்கான ஒரே வழி

இன்றைக்கு காணப்படும் மிகப் பெரிய வஞ்சனைகளில் ஒன்று இயேசு தேவனைக் கிட்டிச் சேரும் ஒரே வழி யல்ல, பல வழிகளில் ஒன்று என்பதாகும். நித்திய ஜீவன் தேவ குமாரன் மூலமாகவே வருகிறது என்பதை மறுப்பதால் இந்தத் தவறு ஏற்படுகிறது. "தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார்; அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது என்பதே அந்த சாட்சியாம். குமாரனை உடையவன், ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்". (1 யோவா. 5:11,12) இயேசு தாமே, "அதற்கு இயேசு நானே வழியும், சத்தி யமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னா லேயல்லாமல் ஒருவனும் பிதாவினி டத்தில் வரான் என்றார்". (யோவா. 14: 6) அவரைத் தவிர வேறு எவரிலும் இரட்சிப்பு இல்லை. (அப். 4: 12)

தேவனுடைய பரிசுத்தம், பாவத்தின் கோரம், அதன் நிவாரணம் ஆகியவற்றை சரியாகப் புரிந்து கொள்ளாததுதான் இயேசுவைத் தவிர தேவனிடம் சேர வழிகளுண்டு என்று சொல்லுவதற்குக் காரணமாயிருக்கிறது. தேவன் பரிபூரண பரிசுத்தர். மனித னுடைய பாவம் அவனை தேவனிட மிருந்து பிரித்து விடுகிறது. (ஏசா. 59: 2) மேலும் அவனை மரணத்துக்கு நேராக வழி நடத்துகிறது. (ரோம. 6: 23) தேவன் நீதியுள்ளவராயிருக்கிறபடியால் அவர் பாவத்தைப் பாராமுகமாயிருக்க முடியாது. எனவே அவர் அதற்கு ஒரு வழியை - விலையேறப் பெற்ற ஒரு வழியை - பாவம் பரிகரிக்கப்படவும் மன்னிக்கப்படவும் ஏற்படுத்தியுள்ளார். அது பாவமற்ற ஒரு இரத்தம் சிந்தப் படுவதாகும். தேவ குமாரனின் இரத்தம் (ஜீவன்) மனிதனின் பாவ நிவாரணத் திற்கு தகுதியும் சிறப்புமுடையது.

அனேகர் தங்கள் நீதியினாலும் நற்கிரியைகளினாலும் இரட்சிப்பைப் பெறலாமென்று தவறாக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால் மக்கள் எவ்வளவு நல்லவர்களாயிருந்தும் பரிசுத்த தேவனுக்கு முன்பாக தங்களை இரட்சித்துக் கொள்ள முடியாது. அவர்கள் பாவம் பரிகரிக்கப்பட்டு, மன்னிக்கப்பட்டு இரட்சிப்பு, நித்திய ஜீவன் ஆகிய ஈவுகளைப் பெற வேண்டும். அது தேவ குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவினால் மட்டுமே கூடும். "தம்முடைய ஒரே பேரான குமாரனை நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப் பட்டது. நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பின தினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1 யோவா. 4: 9-10) இயேசு ஒருவரே தேவனுக்கும் மனிதருக்குமிடையில் மத்தியஸ்தர். 1 தீமோ. 2:5 அவருடைய இரத்தமின்றி தேவனிடம் சேர முடியாது.

அவர் திரும்ப வருகிறார்

இயேசுவின் இரண்டாம் வருகையை மறுக்கிறவர்கள் இருந் தாலும், அவர் நிச்சயமாக வரப் போகிறார். அவர் மிகுந்த வல்லமை யோடும் மகிமையோடும் வரப் போகிறார். (மாற். 13:26, லூக். 9:26) "இதோ மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும். அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தார் எல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள்" வெளி. 1: 7. "தேவனை அறியாதவர்களுக்கும்..... கீழ்ப்படியாத வர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

தமது வல்லமையின் தூதரோடும், ஜ்வாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும் போது இப்படியாகும்". 2 தெச. 1: 7-8.

2 கொரி. 5: 10-ன்படி எல்லாரும் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கும் நாள் வருகிறது. அவரை உதாசீனம் பண்ணினவர்களும் அவருடைய உபதேசங்களை ஏற்றுக் கொள்ளாதவர் களும் அவரது வசனத்தால் நியாயந்தீர்க் கப்படுவார்கள். (யோவா. 12:48) அவரைக் கர்த்தராக ஏற்றுக் கொண்டவர்கள் தீத்து. 2:13, எபி. 2:28 ஆகிய வசனங்களின் படி நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கி யத்துக்கும் அவருடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் தகுதிப்படுத்து கிறது. அவர் நம்மை வருங்கோபத்தி லிருந்து தப்புவிக்கிறார். (1 தெச. 1: 10) தமது பரிசுத்தவான்களால் அன்று அவர் மகிமைப்படுவார்.

கிறிஸ்துவிலே உங்கள் மையத்தை வையுங்கள்

உலகிலும் சபையிலும் எத்தனை பொய்ப் போதகங்களிருந்தாலும், 'கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர்'. (எபி. 13:8) வேத புத்தகம் அவரைக் குறித்து சாட்சியிடுபவைக ளெல்லாம் மாறாதவை. அவர் தேவனு டைய தெய்வீக குமாரன், இரட்சிப்பின் ஒரே வழி, அவர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் மறுபடியும் வரப் போகிறார். (வெளி. 19:11-16) அவரது நபரத்துவத்தையும் போதனையையும் மட்டுப்படுத்தும் பொய் உபதேசங் களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

பொய்யான சுவிசேஷத்திற்கு எச்சரிக்கையாயிருங்கள்

Beware of a false Gospel

Arthur.W. Pint

ஆண்டவர் நல்ல விதைகளை விதைத்த அதே நிலத்தில் சாத்தானும் சுறுசுறுப்பாக பணி செய்கிறான். கோதுமையின் வளர்ச்சியைத் தடுக்க களைகளை விதைக்கிறான். அதுவும் தோற்றத்தில் கோதுமையைப் போலவே இருக்கும். கிறிஸ்துவின் பணியைத் தணிக்கும் நோக்கத்துடன் போலியான நடிப்பின் மூலம் செயல்படுகிறான். கிறிஸ்துவுக்கு ஒரு சுவிசேஷம் இருப்பது போல அவனும் போலியான ஒன்றை வைத்திருக்கிறான். அது சுத்த சுவிசேஷத் திற்கு ஒத்திருப்பதால் திரளான இரட்சிக் கப்படாத மக்கள் ஏமாந்து போகிறார்கள்.

இதைக் குறித்து பவுல் கலாத்திய ருக்கு எழுதும் போது "உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத் தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப் படுகிறேன். வேறொரு சுவிசேஷம் இல்லையே; உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லா மல் வேறல்ல" கலா. 1: 6,8.

இந்தப் பொய்யான சுவிசேஷம் அப்போஸ்தலர்காலத்திலும் பிரசங்கிக்கப் பட்டுள்ளது. எனவே அவர் தொடர்ந்து, 8ம் வசனத்தில், "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால்அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" என்கிறார்.

சாத்தானுடைய சுவிசேஷம் புரட்சியின் தத்துவங்களை உடையதோ, அராஜகத் திட்டம் அடங்கியதோ அல்ல. அது குழப்பத்தையோ போரையோ ஏற்படுத்தாமல் சமாதானத்தையும் ஒற்றுமையையும் நாடுகிறது. குடும்பங் களில் பிரிவினைகளை ஏற்படுத்தாமல் மனித சமுதாயத்தை சகோதரத்து வத்துடன் நோக்குகிறது. மனிதனைத் தாழ்த்தாமல் அவனை முன்னேறி உயர்த்த முயற்சிக்கிறது. நம்மிலுள்ள நல்ல தன்மைகளைக் கண்டுபிடித்து அவற்றை நன்முறையில் வளர்த்த முயற்சிக்கிறது.

இவ்வுலகை மிகவும் சொகு சானதும் இன்பமானதாகவும் ஆக்கி சிறந்த வாழிடமாக்குகிறது. எனவே தேவன் இங்கு இல்லாதிருப்பது உணரப் படாமலும் தேவனுடைய தேவையை இல்லாமலும் ஆக்குகிறது. மனிதன் வரப்போகும் உலகத்தைக் குறித்து எண்ணாமற்போகுமளவு காலத்தையும் நோக்கத்தையும் நிரப்பிவிட முயற்சிக் கிறது. சுய தியாகம், தர்ம சிந்தை, பரோபகாரம் ஆகியவற்றை போதித்து மற்றவர்களுக்காக வாழவும் இரக்க சிந்தையுள்ளவர்களாயிருக்கவும் போதிக் கிறது. ஆனால் மாம்ச சிந்தையோடு மக்களிடம் பிரஸ்தாபமடைய விரும்பு கிறது. மனிதன் விழுந்து போன சிருஷ்டி, தேவனுடைய ஜீவனுக்கு தூரமாகி விட்டவன் என்பதையும் அவன் பாவத்திலும் அக்கிரமத்திலும் மரித்துப் போனபடியால் அவனது ஒரே நம்பிக்கை மறுபடியும் பிறப்பது என்பதை உதாசீனம் பண்ணுகிறான்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு மாறாக சத்தானின் போதனை இரட்சிப்பு கிரியைகளால் பெற்றுக் கொள்ளக் கூடியதென்றும் நற்பண்பு களால் நியாயத்தீர்ப்புக்குத் தப்பலாம் எனவும் போதிக்கிறது. அதன் பரிசுத்த சொற்றொடர்: 'நல்லவனாயிரு நன்மை செய்' என்பதே. இந்த மாம்சத்தில் நன்மை வாசமாயிருப்பதில்லை என்பதை உணர அது தவறி விடுகிறது. தேவனுடைய வசனம் இரட்சிப்பின் கனியால் நற்பண்புகள் ஏற்படும் என்று சொல்ல சாத்தானின் வசனமோ நற்குணத்தால் இரட்சிப்பு ஏற்படுவதாக அறிவிக்கிறது.

தற்கால பீடங்களில் நிற்கிற வர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படைகளை மக்களின் முன் வைப்பதற்குப் பதிலாக கட்டுக் கதைக ளுக்குத் திரும்பி விட்டனர். பாவத்தின் கோரத்தினையும் அதன் நித்திய விளைவு களையும் பெரிதாக்கிக் காட்டுவதற்கு பதிலாக அது அறிவீனம் என்றும் நன்மை செய்யாதது மட்டுமே என்று அற்பமாக்கி விடுகின்றனர்.

'வருங்கோபத்துக்குத் தப்பித்துக் கொள்ள ஓடுங்கள்' என்று சொல்வ தற்குப் பதிலாக தேவனைப் பொய்ய ராக்கி அவர் மிகவும் அன்புள்ளவர், அவரது இரக்கம் பெரிதாயிருப்பதால் தனது சிருஷ்டிகளை நித்திய அழிவுக்கு ஒப்புக் கொடார் என்பார்கள். 'இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு இல்லை' என்பதை சுட்டிக் காண்பிப் பதற்குப் பதிலாக கிறிஸ்துவை தலை சிறந்தவராக எடுத்துக் காண்பித்து அவரது காலடிகளைப் பின்பற்ற அறிவிப் பார்கள். ரோமர் 10:3ன்படி அவர்கள் நடப்பதில்லை. "எப்படியென்றால் அவர்கள் தேவ நீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவ நீதிக்குக் கீழ்ப்படி யாதிருக்கிறார்கள்".

அவர்களது செய்தி மிகவும் உண்மை போலவும், அவர்களது நோக்கம் புகழப்படத்தக்கது போலவும் தோன்றினாலும் அவர்களைக் குறித்து 2 கொரி. 11:13-15 வசனங்களில் இப்படி வாசிக்கிறோம்: அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள், அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக் கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்கார ருடைய வேஷத்தைத் தரித்துக் கொண் டால் அது ஆச்சரியமல்ல. அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாயிருக்கும்.

இன்னுமாக இந்நாட்களில் தேவனுடைய ஆலோசனைகளையும் அவரது இரட்சிப்பின் வழியையும் உத்தமமாகக் கூறி அறிவிக்கிற தலைவர் கள் அனேக சபைகளிலில்லை. இந்தச் சபைகளிலுள்ள ஜனங்கள் சத்தியத்தை அறிந்து கொள்ளும் வாய்ப்புகளு மில்லை. குடும்பங்களிலே வேத பகுதிகள் வாசிக்கப்பட்டு அனுதின ஜெபம் ஏறெடுக்கப்பட்ட நிலையும் கடந்த கால கதையாக மாறி விட்டது.

வேத புத்தக வசனங்கள் பீடங்களில் அறிவிக்கப்படவுமில்லை, சபையாரால் வாசிக்கப்படவுமில்லை. இந்த வேகமான நாட்களில் தேவைகளின் மிகுதியால் மக்களுக்கு சமயமுமில்லை, தேவனை சந்திக்க ஆயத்தப்படவும் முடியவில்லை.

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

நீதி. 14: 12ல் "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" என்று படிக்கிறோம். மரணத்தில் முடிவடையும் வழி சாத்தானுடையது. அது பார்வைக்குச் சரியாயிருக்கும். அது தந்திரமாக கவர்ச்சியான முறையில் அளிக்கப்படுவதால் அதைக் கேட்கிற வர்களுக்கு புத்தியுள்ளதாகத் தென்படும்.

சத்தியம் திரித்துக் கூறப்படுதல்

மதபேதம் திரித்துக் கூறுவதைப் போல சத்தியத்தை முற்றிலும் மறுப்ப தில்லை. பாதிப் பொய் முழுமையான தள்ளிப்போடுதலை விட ஆபத்தானது. எனவே பொய்க்குப் பிதா வானவன் பீடத்தில் நிற்கும் போது அவன் கிறிஸ்தவ அஸ்திபாரத்தை மறுக்காமல் அமைதி யாக ஆதரித்து, தவறான விளக்கங் களையும் பொய்யான செயல் பாடு களையும் கூறுகிறான்.

எடுத்துக்காட்டாக தனிப்பட்ட தேவன் உண்டு என்பதை விசுவாசிக்க வில்லை என்று அவனால் தைரியமாகக் கூற முடியாது. அவர் இருப்பதை நம்புவது போல நடித்து அவரது குணாதி சயங்களைப் பொய்யாக விவரிக்கிறான். தேவன் எல்லாருக்கும் ஆவிக்குரிய தந்தை என்று அவன் கூறும் போது வேத வாக்கியம் "கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே" (கலா. 3: 26) என்று கூறுகிறது. மேலும் "அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்" யோவா. 1: 12.

பிதாவாகிய தேவன் மிகவும் இரக்கமுள்ளவராயிருப்பதால் ஒருவரையும் அவர் நரகத்துக்கு அனுப்பமாட்டார் என்பது பிசாசின் வாதம். ஆனால் வெளி. 20:15 கூறுவதை காண்போம்: "ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ, அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்".

மேலும் மனித சரித்திரத்தின் நடு நாயகமாக ஆண்டவராகிய இயேசுவை வைப்பதில் சாத்தான் தவறுவதில்லை. ஆனால் அவனது சுவிசேஷம் அவரை இவ்வுலகில் வாழ்ந்த மிக நல்ல மனிதராகக் காட்டுகிறது. எனவே அவரது செயல்கள் உருக்கம், இரக்கம், நற்குணம், போதனைகளின் மேன்மை எல்லாம் தூக்கிக் காண்பிக்கப்படுகின்றன. இவ்வாறு அவரது வாழ்வைக் குறித்து புகழாரம் செலுத்தப்படுகிறது.

ஆனால் அவரது தியாக மரணம், முக்கியமான அவரது பாவ நிவிர்த்தி, சிலுவை மரணம் இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. அவரது வெற்றியான உயிர்த்தெழுதல் மூடநம்பிக்கையின் கால ஒரு நம்பிக்கை என கணிக்கப்படுகிறது. ஆனால் இது இரத்தமற்ற சுவிசேஷமும் சிலுவையற்ற கிறிஸ்துவுமாகும். கிறிஸ்து மாம்சமாக மகிமையோடு வெளிப்பட்ட தேவன் என்பதை வெளிப்படுத்தாமல் அவரை ஒரு சிறந்த மனிதனாகக் காட்டுகிறது.

நரகத்துக்குச் செல்லும் பாதை நல்ல நோக்கங்களை உடையது. இவ்வாறு நல்ல நோக்கங்களோடும், உத்தம தீர்மானங்களோடும் மேலான அபிப்பிராயங்களோடும் ஆரம்பித்த அனேகரை அக்கினிக் கடலிலே காணலாம். அவர்கள் நற்குணசாலிகளா யிருந்தாலும் தங்கள் நீதியின்மேல் சார்ந்து கொண்டு ஒருபோதும் தங்களைக் குற்றவாளிகளென்றோ, பாவிகளென் றோ, நரகத்திற்குப் பாத்திரவான் களென்றோ எண்ணாமலும் தங்களுக்கு ஒரு இரட்சகர் தேவை என்பதை அறியா மலிருக்கிறார்கள்.

இதுதான் மனிதனுக்குச் சரியாகத் தோன்றும் வழி. சாத்தான் நமது கிரியை களால் நாம் இரட்சிக்கப்பட்டு, நமது நற்கிரியைகளால் நியாயந் தீர்க்கப்படு வோம் என்று சொன்னாலும் வேத வாக்கியம் என்ன சொல்லுகிறது? "கிருபை யினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" (எபேசி. 2:8,9) "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்". (தீத்து 3:5)

ஆயிரக்கணக்கான மக்கள் இயேசுவைக் குறித்து வேதபாட சாலை யிலும், வேறு விதங்களிலும் அவரது வாழ்க்கை போதனை ஆகியவற்றை அறிந்து அவரது கருத்துக்களைப் பயிற்சிக்க முயற்சிப்பதால் அவை இரட்சிப்புக்குப் போதுமானது என்று எண்ணுகின்றனர். இப்படிப்பட்ட வர்கள் பெரியவர்களாகி நாஸ்திகக் கொள்கைகளைப் படிக்கும் போது நசரேயனாகிய இயேசு வாழவில்லை என போதிக்கப்படுகின்றனர். ஆனால் இளம் வயதின் அழுத்தங்கள் எளிதில் அழிக்கப் பட முடியாமலிருப்பதால் அவர்கள் உறுதியாக இயேசுக் கிறிஸ்துவை விசுவாசித்து அறிக்கையிடுகின்றனர். கிறிஸ்துவின் தன்மை பற்றிய பழமை யான தத்துவங்களை இருதய பூர்வமாக ஏற்றுக் கொண்டு அவருக்காக முழுவது மாக தங்களை அர்ப்பணிக்காவிடில் அதுவும் மனித பார்வைக்குச் சரியான வழிதான்.

எங்கே நிற்கிறீர்கள்?

நீங்கள் உண்மையாகவே கேட்டுக்குப் போகிற அகல பாதையை விட்டு விட்டீர்களா? அவருக்குப் பிரியமற்ற எல்லாவற்றையும் வெறுக்க அவற்றைக் கண்டு பயப்பட கிறிஸ்து வின் அன்பு உங்களில் கிரியை செய்கி றதா? அவர் உங்கள் மேல் ஆளுகை செய்ய விரும்புகிறீர்களா? (லூக். 19:14) தேவன் உங்களை ஏற்றுக் கொள்ளும்படி முழுவதுமாக அவரது நீதியிலும் இரத்தத் திலும் சார்ந்து கொள்வீர்களா?

சாத்தானுடைய இன்னொரு சுவிசேஷம் பிரசங்கிப்பவர்கள் கிறிஸ்து வின் நிவாரண பலியினைக் கூறிவிட்டு கேட்கிறவர்களிடம் தேவ குமாரனை விசுவாசியுங்கள் என்று சொல்லுவ தாகும். எனவே பாவ உணர்வற்ற அனேகர் தாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டதாக எண்ணுகிறார்கள்.

ஆனால் கிறிஸ்து: "நீங்களும் மனந்திரும்பாவிட்டால் இப்படியே கெட்டுப் போவீர்கள்" (லூக். 13: 3) என்று கூறியுள்ளார். மனந்திரும்புவது என்பது பாவத்தினை வெறுத்து, அதற்காக துக்கித்து, அதனிடமிருந்து திரும்பு வதாகும். ஆவியானவர் உள்ளத்தை உடைத்து ஊற்றச் செய்கிறார். **இருதயம் நொறுங்காதவர்கள் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்து இரட்சிக்கப்பட முடியாது.**

தேவ குமாரன் மக்களை அவர்கள் பாவத்தில் இரட்சிப்பதற்காக அல்ல அவர்கள் பாவத்திலிருந்து இரட்சிக்க வந்தார் மத். 1:21. பாவத்தி லிருந்து இரட்சிக்கப்படுவது என்பது தேவனுடைய அதிகாரத்தை உதாசீனப் படுத்துவதிலிருந்தும் சுய சித்தம், சுய பிரீதி ஆகியவற்றிலிருந்து விடுபடுவதும் நமது சொந்த வழியினை விட்டுவிடுவது மாகும். (ஏசா. 55:7) நம்மை தேவனுடைய அதிகாரத்திற்கு ஒப்படைப்பதும், அவரது ஆளுகையில் நம்மை இணைத்துக் கொள்வதும், அவரால் ஆளப்பட நம்மை முற்றிலும் அர்ப்பணிப்பதுமாகும். கிறிஸ்துவின் நுகத்தை தங்கள்மேல் எடுக்காதவர்களும், எல்லா விஷயங் களிலும் அவரைப் பிரியப்படுத்த விரும் பாதவர்களும் தாங்கள் 'கிறிஸ்துவின் செய்து முடிக்கப்பட்ட பணியில் சார்ந் திருக்கிறோம்' என்பது சாத்தானின் தந்திர மாகும்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும் சாத்தானின் ஏமாற்றுதலையும் குறித்து இரு வேதபகுதிகளை மத்தேயு 7ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். முதலாவது 13,14 வசனங்களில் காணப்படுகிறது. (மத். 7:13,14 வசனங்களைப் படிக்க)

இரண்டாவதனை 22,23 வசனங் களில் படிக்கிறோம். (மத். 7: 22,23 படிக்க)

அன்பானவர்களே, கிறிஸ்துவின் பெயரில் பணியாற்றவும், பிரசங்கிக்கவும் செய்வதால் உலகமும் சபையும் நம்மை அறிந்திருந்தாலும் ஆண்டவர் நம்மை அறியவில்லை என்று சொல்ல முடியும். எனவே நாம் எங்கிருக்கிறோம் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டியது அவசியம். நம்மை பரிசோதித்து நாம் விசுவாசத்தில் நிலைத்திருக்கிறோமா என்பதை வேத வசனத்தைக் கொண்டு அளந்து பார்க்க வேண்டும். நாம் தந்திரவானான எதிரி யால் வஞ்சிக்கப்பட்டிருக்கிறோமா என கண்டுபிடிக்க வேண்டும். நாம் மணலின் மேல் அஸ்திபாரமிட்டு கட்டுகிறோமா இயேசுக் கிறிஸ்துவாகிய பாறையின்

(7-ம் பக்கம் பார்க்க)

ஆழத்தில் ஏற்பட்ட ஆபத்தில்

In peril on the deep

William R. Moody

(1892ம் ஆண்டின் கடைசிப் பகுதியில் D. L. மூடி அவர்கள் நீண்ட சேவை நிமித்தம் கடல் கடந்து சென்று விட்டு வீட்டிற்குத் திரும்ப எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவரும் அவரது மகனும் Spree என்ற நீராவிக் கப்பலில் சௌதாம்டனிலிருந்து நியூயார்க் வர ஒழுங்கு செய்யப்பட்டது. இந்தப் பிரயாணம் மிகவும் பயபக்தியும் நீண்ட கால அழுத்தமும் அவரது வாழ்வில் ஏற்படுத்தக் கூடியதாயிருந்தது. அவரது சாட்சியினைக் கீழே காணலாம்)

கடலில் துன்பம்

எங்களது பிரயாணத்தில் மூன்று நாட்கள் தேவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டே படுத்திருந்தேன். ஏனெனில் எனது அனைத்து விதமான பிரயாணங் களிலும் ஒரு போதும் விபத்தோ, இயற்கையின் சீற்றமோ இருந்ததில்லை. இவ்வித நன்றி நிறைந்த எண்ணங்களோ டிருக்கையில் கப்பல் ஒரு பாறையில் மோதியது போன்ற பயங்கர சத்தத்தால் திடுக்கிட்டேன். முதலில் நான் அதிக மாகக் கவலைப்படவில்லை. ஆனால் எனது மகன் தனது தூங்குமிடத்திலிருந்து குதித்து கப்பலின் மேற் தளத்திற்கு ஓடினான். சில வினாடிகளில் அவன் திரும்பி வந்து, தண்டு வலித்துச் செல்லும் கம்பி உடைந்து போனதாகவும் கப்பல் மூழ்கிக் கொண்டிருப்பதாகவும் கூறி னான். முதலில் என்னால் அதை நம்ப முடிய வில்லை. ஆனால் உடை மாற்றிக் கொண்டு மேல் தளத்திற்கு சென்றேன். மகன் சொல்லியது உண்மை என அறிந்து கொண்டேன்.

அந்த விபத்தின் பயங்கரம் தெளிவானது. பிற பயணிகள் தங்கள் அறைகள் விரைவாக தண்ணீரால் நிரம்புவதை அறிவித்துக் கொண்டே மேல் தளத்திற்கு வந்தனர். இரண்டு அறைகள் முழுவதும் தண்ணீரால் நிரம்பி விட்டன. அவற்றின் அழுத்தத்தைத் தடை செய்ய முயற்சிகள் எடுக்கப் பட்டன. ஆயினும் கப்பல் சரிய ஆரம் பித்தது. ஆனால் தலைவன் Willigerod மற்றும் அவரது திறமைமிக்க பொறி யாளர்களால் கப்பல் நேராக்கப்பட்டது.

மத்தியான வேளையில் கப்பல் தலைவன் பிரயாணிகளிடம் தண்ணீர் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்ட

(6-ம் பக்க தொடர்ச்சி)

மேல் கட்டுகிறோமா என்று பார்க்க வேண்டும். தூய ஆவியானவர் தாமே நமது இருதயங்களை ஆராய்ந்து நமது சித்தங்களை உடைத்து தேவனுக்கு எதிராக நமக்கு இருக்கும் பகைமையை அகற்றி நம்மில் ஆழமான உத்தம மனந் திரும்புதலை ஏற்படுத்துவதால், நாம் தேவ ஆட்டுக்குட்டிக்கு நேராக நமது கண்களை ஏறெடுப்போம். அவரே உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.

தாகவும் சில கடந்து செல்லும் கப்பல் களை சந்திக்கும் வாய்ப்பு உண்டு எனவும் அறிவித்தார். கடல் மிகவும் கொந் தளித்துக் கொண்டிருந்தது. எனவே கப்பல் பக்கத்திற்குப் பக்கமாக சாய்ந்து கொண்டிருந்தது. ஆயினும் கப்பல் தலைவன் மூன்று மணிக்குள்ளாக சரியான நிலைக்குக் கொண்டு வந்து விடலாமென்று பயந்து கொண்டிருந்த மக்களுக்கு நம்பிக்கை தெரிவித்தான். ஆனால் இரவு வந்தும் யாத்திரைக்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை.

அந்தகாரமான இரவு

அந்த இரவு மிகவும் அந்தகார மானதும் அனைவரது வாழ்விலும் பயங்கரமானதுமாயிருந்தது. தங்கள் மேல் வரப்போகும் அழிவை எண்ணி நூற்றுக்கணக்கானோர், ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் கலங்கிக் கொண்டிருந்தனர். யாரும் தூங்கு வதற்குத் துணியவில்லை. கப்பலின் விசாலமான முன் அறையில் யூதர்கள், புரோட்டஸ்தாந்துகள், கத்தோலிக்கர் மற்றும் நாஸ்திகர் கூடியிருந்தோம். நாஸ்திகர்கள்தான் அதிகமாயிருந்தனர். மக்களின் வேதனைக்கும், கவலைக்கும் எல்லையில்லாமலிருந்தது. பேச முடியாத நிலையில் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக்கொண்டிருந்தனர். ராக்கெட்டுகள் கப்பலிலிருந்து அனுப்பப்பட்டும் பதிலே யில்லை. ஒவ்வொரு மணி நேரமும் ஆபத்து அதிகரிப்பது போலிருந்தது.

ஞாயிற்றுக் கிழமை காலை நம்பிக்கையிழந்து காணப்பட்டது. நான் கப்பல் தலைவனுடைய அனுமதியுடன் கப்பலின் விசாலமான முன் அறையில் ஒரு ஆராதனையை ஒழுங்கு பண்ணி னேன். அறிவிப்பு கொடுக்கப்பட்ட போது ஏறக்குறைய அனைத்துப் பிரயாணிகளும் கூடி வந்து விட்டனர்.

ஒரு தூணை பலமாகப் பிடித்துக் கொண்டு சங்கீதம் 91 ஐ வாசித்தேன். அந்த நேரத்திலிருந்து அது எனக்கு புதிதாகத் தென்பட்டது. 11வது வசனம் என்னை மிகவும் தொட்டது. அது உண்மையாக தெய்வீக நம்பிக்கையை அளித்தது. "உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளை யிடுவார்". மேலும் சங். 107:20, 31 வசனங் களையும் வாசித்தேன். பின்பு நாங்கள் எதிர்பார்த்த கரையில் பத்திரமாகப் போய்ச் சேர ஜெபித்தோம்.

நான் மரண பயத்திற்கு மேலானவன் என்று எண்ணியிருந்தேன். அதைக்குறித்து நான் அடிக்கடி பிரசங்கித்துமிருந்தேன். கிறிஸ்தவர்கள் விசுவாசத்தின் மூலம் வெற்றி பெற வேண்டுமென அறிவுறுத்தியிருக்கிறேன். உள்நாட்டுப் போரின் போது குண்டு களுக்குப் பயப்படாமலிருந்தேன். காலரா என்ற பயங்கர தொற்று நோய் சிக்காக்கோவிலிருந்த போது மருத்துவர் களோடு நோயுற்றவர்களையும் மரித்தவர் களையும் சந்தித்தேன். மரண பயமே எனக்கு இருக்கவில்லை.

ஆனால் மூழ்கிக் கொண்டிருந்த கப்பலின் அனுபவம் வேறு. எனது ஆத்துமாவுக்கும் எனது இரட்சகருக்கு மிடையில் எந்த தடுப்புச் சுவரும் இல்லை. நான் மரித்துப் போனால் பரலோகத்தில் கண் விழிப்பேன் என்ற நிச்சயம் எனக்கிருந்தது. ஆனால் எனது எண்ணங்கள் எனது அருமை மனைவி, பிள்ளைகள், கடலுக்கு அப்பாலும் இப்பாலுமுள்ள நண்பர்கள், நடத்தும் பள்ளி, ஆண்டவருக்காக எனது விருப்பமான பணிகள் ஆகியவற்றைச் சுற்றி வந்தன. எனவே நான் கதறினேன் என்பதை அறிக்கையிடுகிறேன். எனது வாழ்வில் அவை மிகமிக இருளான மணி நேரங்கள்.

என்னால் அதை சகிக்க முடிய வில்லை. எனக்கு விடுதலை வேண்டும். அது ஜெபத்தின் மூலமாகவே வர முடியும். எனது கதறுதலை தேவன் கேட்டார். எனது உள்ளத்தின் ஆழத்தி லிருந்து "உமது சித்தம் ஆகக்கடவது" என்று கூற தேவன் உதவி செய்தார். இனிய சமாதானம் இருதயத்தில் வந்தது. நான் படுக்கைக்குச் சென்றேன். வாழ்வில் இதுவரை இல்லாத அமைதலான நித்திரை என்னை ஆட்கொண்டது. என் இதயத்தின் ஆழத்திலிருந்து அவரை நோக்கிக் கூப்பிட்டேன். அவர் என் சத்தத்தைக் கேட்டு என்னை எல்லா இக்கட்டுகளுக்கும் விலக்கி மீட்டார். தேவன் ஜெபத்துக்குப் பதிலளிப்பவர் என்பதை சந்தேகிக்கவே முடியாது.

தேவனுடைய காப்பாற்றுதல்

எனது மகன் யேல் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். அவனு டைய கல்விமான்களான விரிவுரை யாளர்கள் ஜெபத்திற்கு தேவன் நேரடி யாகப் பதிலளிப்பதைக் குறித்து சில சந்தேகங்களை ஏற்படுத்தியிருந்தனர். அந்த இரவு எனது மகன் தூங்கவில்லை. ஏறக்குறைய அதிகாலை 2.15 மணிக்கு அவன் என்னிடம் வந்து என்னை எழுப்பினான். நான் கப்பலின் மேல் தளத்திற்குச் செல்லும்படி என்னிடம் கூறினான். அங்கே இடைவெளி விட்டு வெளிச்சம் அலைகளுக்கு மேலே காணப் பட்டது. கப்பலோ பக்கத்துக்குப் பக்கமாக சரிந்து கொண்டிருந்தது. 'இது தான் நமது பெத்லகேமின் நட்சத்திரம்'..... 'தேவன் நமது ஜெபத்தைக் கேட்டு விட்டார்' என்று அவன் கூறினான். அந்த ஒளி 'லேக் ஹாறான்' என்ற நீராவிக் கப்பலிலிருந்து வந்தது. அது மான்ட்றியா லிலிருந்து லிவர்ப்பூல் சென்று கொண் டிருந்தது. ஆனால் எங்கள் கப்பலின் துயர அடையாளங்களைக் கண்டு எங்களை நோக்கி வந்தது. நம்பிக்கை யிழந்த பிரயாணிகள் அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை.

ஆனால் இந்தச் சிறிய கப்பல் கியூன்ஸ்டௌன் வரை எங்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

கப்பலைக் கொண்டு செல்ல முடியுமா? ஆயிரம் கிலோ மீட்டர் கடந்து செல்வதைக் குறித்த கவலையும் தொடர்ந்து ஜெபமும் ஏறெடுக்கப் பட்டது. அது துணிச்சலும் ஆபத்துமான முயற்சி. இரண்டு கப்பல்களும் ஒரு கனமான கம்பிகளால் இணைக்கப் பட்டன. ஒரு பெரும்புயல் எழும்பினால் இக்கம்பிகள் நூல் போல அறுந்து விடும். நாங்களும் எங்கள் முடிவுக்கு விட்டு விடப் படுவோம் ஆனால் நான் பயப்பட வில்லை. தேவன் தொடங்கின பணியை அவரே முடிப்பார். அலைகள் அமைதலாயின. கப்பல்கள் மெதுவாக நகர்ந்தன. சுற்றிலும் புயல் இருந்தாலும் உடைந்த கப்பலின் அருகே புயல் நெருங்க வில்லை. ஏழு நாட்களுக்குப் பிறகு கியூன்ஸ்டன் துறைமுகத்தை அடைந்து அங்கு நன்றித் தொழுகை நடத்தினோம். எங்களை இழுத்துச் சென்ற அந்த சிறிய கப்பலுக்குப் போதுமான அளவு பெலனையும் நிலக்கரியையும் தேவன் அளித்தார். அந்தக் கப்பலின் தலைவனும் ஜெப வீரனாயிருந்தான். அவன் தேவனுடைய உதவியைப் பெற்று ஆபத்தும் கஷ்டமுமான இந்தப் பணியை நிறைவேற்றினான். தேவன் எங்கள் அனைவருடைய ஜெபத்தையும் கேட்டு எங்களைப் பத்திரமாகக் கரை சேர்த்தார். தேவனுக்கே மகிமை.

ஆவியானவரின் மிகப் பெரிய ஆவல் இயேசுக் கிறிஸ்துவை மனிதருக்கு வெளிப்படுத்துவதாகும்.

(2-ம் பக்க தொடர்ச்சி)

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி.

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; அவர் செய்த சகல உபகாரங் களையும் மறவாதே.

அவர் உன் அக்கிரமங்களை யெல்லாம் மன்னித்து, உன் நோய்களை யெல்லாம் குணமாக்கி,

உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங் களினாலும் முடி சூட்டி,

நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமான மாய் உன் வயது வால வயது போலாகிறது. சங்கீதம் 103: 1-5

வாசகர் அனைவருக்கும் எங்கள் அன்பான, ஆசீர்வாதமான புது வருட வாழ்த்துக்கள்

நீயோ ஜெபம் பண்ணும் போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். மத்தேயு 6:6

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

அலுவலகம் : 95432 21008
உதவி : 94897 40295

உங்கள் சகோதரன்
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

புத்தாண்டு வாழ்த்து

"அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கும் தேசம், வருஷத்தின் துவக்க முதல் வருஷத்தின் முடிவு மட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதன் மேல் வைக்கப்பட்டிருக்கும்."

உபாகமம் 11:12.

நன்றி

கடந்த ஆண்டு முழுவதும் **வருகையின் தூதன்** ஊழியங்களை கடனின்றி நடத்த ஆண்டவர் இரக்கம் பாராட்டினார், அவருக்கே சகல துதி ஸ்தோத்திரங்களை செலுத்து கிறேன். வாசகர் அனைவருக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறேன்.

2023

ஆண்டவரை அதிகமாய் நேசிக்கும் ஆண்டு
Lovest than me more than these?
John 11:15.

அவசர அறிவிப்பு

வாசகரில் சிலர் பத்திரிகை வரத் தவறினால், 'பத்திரிகையை நிறுத்தா தீர்கள்,' 'எல்லா பத்திரிகையும் வருகிறது, உங்கள் பத்திரிகை மட்டும் வரவில்லை' என்றெல்லாம் புகார் கூறுகிறீர்கள். உண்மையில் 2017-ம் ஆண்டு முதல் நாங்கள் யாருக்கும் பத்திரிகையை இதுவரை நிறுத்தவில்லை. எங்கள் அலுவலகத்தில் எந்த தவறும் இல்லை.

எவ்வளவோ பிரயாசப்பட்டும் ஒரு வாசகருக்கு தபால் வழி பத்திரிகை போகாததினால், அநேக வருடங்களாக அவருக்கு மாத்திரம் **கொரியர் வழியாக** பத்திரிகை அனுப்பி வந்தோம்.

உபவாச ஊழியங்களுக்காக சபை போதகர்களுக்கு துரித தபால் (Speed Post) பதிவு தபால் (Registered Post) வழியாக அனுப்பப்பட்ட கடிதங்கள் தங்களுக்கு கிடைக்கவில்லை என்று தெரிவிக்கிறார்கள்.

இந்த நிலையில் உங்களில் யாருக்காவது மாதந்தோறும் 10-ம் தியதிக்குள் பத்திரிகை வரத்தவறினால் **தயவாய்** உடனே எங்களுக்கு போன் பண்ணுங்கள். இந்த கைபேசி எண்களை குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

அலுவலகம் : 95432 21008
உதவி : 94897 40295

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

இடம் : **Calvary A.G. Church**
9/1, Bus Stand Road, V.K. Pudur, Surandai Mobile : 94432 61439

நாள் : ***21.01.2023,*** *3-வது சனிக்கிழமை*

நேரம் : *காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை*

செய்தி : *சகோதரன்* **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** *குஜராத்*
IEM மிஷனெரிகள், *தமிழ்நாடு*

தொடர்பு : **வருகையின் தூதன்** *மொபைல் : 95432 21008*

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

பெந்தெகொஸ்தே நாளிலே பேதுருவும் அவனோடிருந்தவர்களும் தூய ஆவியால் நிரப்பப்பட்ட போது அவர்கள் தூய ஆவியானவரைப்பற்றி அதிகமாகப் பேசாமல் **கிறிஸ்துவைப்** பற்றியே பேசினார்கள்.

வேத வசனத்தைப் புரிந்து கொள்ள நாம் அனுதினமும் ஆவியானவரால் போதிக்கப்பட வேண்டும்.

இன்றைய பிரசங்கங்களின் தோல்விக்கு காரணம் தூய **ஆவியானவர்** வெளிப்படுத்தாத வேறு செய்திகள் சொல்லப்படுவதாகும்.

அனேகர் தங்கள் நீதியினாலும் நற்கிரியைகளினாலும் **இரட்சிப்பைப்** பெறலாமென்று தவறாக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால் மக்கள் எவ்வளவு நல்லவர்களாயிருந்தும் பரிசுத்த தேவனுக்கு முன்பாக தங்களை இரட்சித்துக் கொள்ள முடியாது. அவர்கள் பாவம் பரிகரிக்கப்பட்டு, மன்னிக்கப் பட்டு இரட்சிப்பு, நித்திய ஜீவன் ஆகிய ஈவுகளைப் பெற வேண்டும்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason